புதுச்சேரி அரசு
ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அறிவிப்பு

"டாக்டர் அம்பேத்கர் மருத்துவ உதவி திட்டம்"

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் கீழ் இயங்கும் டாக்டர். அம்பேத்கர் அறக்கட்டளை மூலமாக ஆண்டு வருமானம் ரூ.3,00,000/-த்திற்கு (மூன்று லட்சம்) மிகாமல் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் குடும்பத்திற்கு மருத்துவ உதவி வழங்கும் நோக்கில் "டாக்டர் அம்பேத்கர் மருத்துவ உதவி திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தீவிர நோய்களான புற்றுநோய், சிறுநீரகம், இதயம், கல்லீரல், மூளை ஆகிய உடல் உறுப்புகளுக்கு அறுவைச் சிகிச்சை, உடல் உறுப்பு மாற்று மற்றும் தண்டுவட அறுவைச்சிகிக்சை உட்பட்ட உயிருக்கு ஆபத்தடான வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்க நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டம் கீழ்கண்ட மருத்துவமனைகள் வாயிலாக செயல்படுத்தப்படும்.

- அகில இந்திய மருத்துவ அறிவியல் (எய்ம்ஸ்), புதுடில்லி மற்றும் பிற மாநிலங்களில் உள்ள எய்ம்ஸ்
- சஞ்சய் காந்தி முதுகலை நிறுவனம், லக்னோ, உத்திரப்பிரதேசம்.
- பாட்னா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பாட்னா, பீகார்
- ஜபல்பூர் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், ஜபல்பூர், மத்தியபிரதேசம்.
- ப. பார்வா புற்றுநோய் நிறுவனம், குவஹாத்தி, அசாம்.
- பிர்லா ஹார்ட் அறக்கட்டளை, கொல்கத்தா, மேற்கு வங்கம்.
- கலிங்கா மருத்துவமனை லிமிடெட், சந்திரசேகர்பூர், புவனேஸ்வர், ஒரிசா.
- டாடா புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம், மும்பை, மகாராஷ்டிரா.
- நிஜாம் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்ஸ், ஹைதராபாத், ஆந்திரா.
- தன்னார்வ சுகாதார சேவைகள், சென்னை
- இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட அனைத்து CGHS மருத்துவமனைகள்.
- CGHS திட்டத்தின் கீழ் சேர்க்கப்படாவிட்டாலும் அனைத்து மாநில அரசு மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரிகள்
- அனைத்து மாநில மருத்துவமனைகள்
- மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மருத்துவமனைகள்
- மத்திய மாநில அரசுகளால் நிதியுதவிளிக்கப்பட்ட அனைத்து மருத்துவமனைகள்
- மேற்கண்ட தீவிர நோய்களை சிகிச்சை அளிக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட மாவட்ட தலைமையகங்கள்/ முக்கிய நகரங்களில் உள்ள அனைத்து மருத்துவமனைகள்.
- அறக்கட்டளையின் தலைவர் உண்மை மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் உறுதியாக நம்பும் இதர மருத்துவமனைகள்

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரர் இந்த மருத்துவ உதவியினைப் பெற பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் அல்லது வெற்று காகிதம் மூலம், **http://www.ambedkafoundation.nic.in/ அல்லது www.adwelfare.py.gov.in** என்ற இணையதளத்தில் தேவையான தகவல்களை (இணைப்பு – I ல் உள்ளவாறு) சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட வேண்டியவை: (i) சாதி சான்றிதழ் (ii) வருமான சான்றிதழ் (iii) உணவு பங்கீட்டு அட்டை / ஆதார் அட்டை ஆகியவற்றின் சுய சான்றளிக்கப்பட்ட நகல் (iv) இணைப்பு – I ல் உள்ளவாறு மருத்துவமனை கண்காணிப்பாளரால் முறையாக சான்றளிக்கப்பட்ட அறுவை சிகிச்சையின் மதிப்பிடப்பட்ட செலவீனம்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவம் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும் 15 தினங்களுக்கு முன்னதாக இயக்குநர், டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை, 15, ஜனபத், புதுடில்லி என்ற முகவரிக்கு வந்து சேர வேண்டும்.

விநியோகம்:

மதிப்பிடப்பட்ட தொகையில் 100% அதிகபட்ச உச்சவரம்புடன் சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு கீழ் உள்ள அட்டவணைப்படி நேரடியாக, RTGS/NEFT/DD யாக வழங்கப்படும்.

இதய அறுவை சிகிச்சை	ரூ.1.25 லட்சம்
சிறுநீரக அறுவை சிகிச்சை / டயாலிசிஸ்	ரூ. 3.5 லட்சம்
மூளை அறுவைச் சிகிச்சை –	ரூ.1.5 லட்சம்
புற்றுநோய் அறுவை சிகிச்சை / கீமோதெரபி / கதிரியக்க சிகிச்சை	ரூ.1.75 லட்சம்
சிறுநீரகம் / உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை	ரூ.3.5 லட்சம்
முதுகெலும்பு அறுவைச் சிகிச்சை	ரூ.1.00 லட்சம்
உயிருக்கு ஆபத்தான பிற நோய்கள்	ரூ.1.00 லட்சம்

இறுதி ரசீது பட்டியல் (Final Bill) மற்றும் பயன்பாட்டு சான்றிதழை (Utilization Cerytificate), நோயாளி தான் மருத்துவமனையிலிருந்து வெளியேறும் (Discharge) முன், டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளைக்கு சமர்ப்பிப்பார் எனும் நிபந்தனையுடன், நோயாளி தனது அறுவைச் சிகிச்சைக்கு முன், அவருக்கான மருத்துவ உதவித் தொகையை ஒரே தவணையில் பெறலாம்.

பயன்படாத உதவித்தொகை / நிலுவைத்தொகை ஏதேனும் இருந்தால் அதனை உடனே நோயாளி மருத்துவமனையிலிருந்து வெளியேறிய நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அறக்கட்டளைக்கு திருப்பி செலுத்திவிட வேண்டும்.

அறக்கட்டளை மற்றும் பிற ஆதாரங்கிளின் வாயிலாக பெறப்பட்ட மருத்துவ உதவி அறுவைச்சிகிச்சையின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவை விட அதிகமாக இருக்கக் கூடாது.

விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய "மதிப்பிடப்பட்ட செலவு செலவு சான்றிதழ் அறுவைச்சிகிச்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும்.

தேவையான ஆவணங்கள்:

விண்ணப்பப்படிவம் (இணைப்பு -1 இணைக்கப்பட்டுள்ளது) மற்றும் புகைப்படம் பின்வரும் ஆவணங்கள் / சான்றிதழ்களுடன் இருக்க வேண்டும்

(i) சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளரால் முறையாக கையொப்பமிட்ட அசல் மதிப்பீட்டு செலவு சான்றிதழ். இதில் அறுவைச்சிகிச்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(ii) பின்வருவனவற்றின் சுய சான்றளிக்கப்பட்ட நகல்கள்:

(அ) சமீபத்திய வருமானச் சான்றிதழ் (ஆ) சாதி சான்றிதழ் மற்றும்

(இ) நோயாளியின் ரேஷன்கார்டு / ஆதார் அட்டை.

(iii) சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான ஆவணங்கள் அதாவது பயனாளியுடனான உறவு (படிவம் 14, அங்கீகாரக் குழு சான்றிதழின் முடிவுக்கான வடிவப்படி), சிறுநீரக நன்கொடையாளரின் விவரங்கள் அதவாது பெயர், வயது, முகவரி, இரத்தவகை, பயனாளியின் UIDAI எண் / ஆதார் எண்.

(iv) விண்ணப்பம் அங்கீகரிக்கப்படும்பட்சத்தில், உதவி / மானியத்தொகையை விரைவாக அனுப்ப, மருத்துவமனையின் வங்கி விவரங்கள்: (அ) மருத்துவமனையின் வங்கிக் கணக்கு எண் (ஆ) கணக்கு வைத்திருப்பவரின் பெயர் (இ) IFSC குறியீடு எண் ஆகியன விண்ணப்பத்துடன் வழங்கப்பட வேண்டும்.

பிற நிபந்தனைகள்:

அறக்கட்டளை மற்றும் பிற ஆதாரங்களின் வாயிலாக பெறப்பட்ட மருத்துவ உதவி அறுவைச் சிகிச்சையின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவை விட அதிகமாக இருக்கக் கூடாது. இது தொடர்பான சான்றிதழ் சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட வேண்டும்.

விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய "மதிப்பிடப்பட்ட செலவு செலவு சான்றிதழ் (இணைப்பு –II) அறுவைச்சிகிச்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும்.

மருத்துவ அறுவைச் சிகிச்சை / மருத்துவச் சிகிச்சைக்காக செலவிடப்பட்ட தொகையினை, மருத்துவ உதவித்தொகையாக திரும்ப்ப பெற அனுமதியில்லை. ஆயினும் அறுவைச் சிகிச்சை நடைபெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்கு முன்பாக, டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையில் விண்ணப்பித்தவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் தொகையினை திருப்பி செலுத்த பரிசீலிக்கப்படும்.

நோயாளியின் சுய சான்றளிக்கப்பட்ட புகைப்படமும் விண்ணப்பத்தில் ஒட்டப்பட வேண்டும்.

இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலம் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை,
புதுச்சேரி.